நம்மாழ்வார் அருளிச் செய்த
திருவாய்மொழி
பத்தாம் பத்து

ஆறாம் திருவாய்மொழி - அருள் பெறுவார்
காமுகன் காமினியின் அழுக்குகப்பது போலே, எம்பெருமான் ஆழ்வாரது ப்ராக்ருத சரீரத்தை உகந்து, அவ்வுடம்புடன் அவரைப் பரமபதம் அழைத்துச் செல்ல அவரது இசைவு பார்த்திருந்தமையைக் கூறுதல்

** அருள் பெறுவார் அடியார் தம் * அடியனேற்கு * ஆழியான்
அருள் தருவான் அமைகின்றான் * அது நமது விதி வகையே **
இருள் தருமா ஞாலத்துள் * இனிப் பிறவி யான் வேண்டேன் *
மருளொழி நீ மட நெஞ்சே! * வாட்டாற்றான் அடி வணங்கே 1

வாட்டாற்றான் அடி வணங்கி * மா ஞாலப் பிறப்பு அறுப்பான் *
கேட்டாயே மட நெஞ்சே! * கேசவன் எம்பெருமானை **
பாட்டாய பல பாடிப் * பழ வினைகள் பற்று அறுத்து *
நாட்டாரோடு இயல்வு ஒழிந்து * நாரணனை நண்ணினமே 2

நண்ணினம் நாரயணனை * நாமங்கள் பல சொல்லி *
மண் உலகில் வளம் மிக்க * வாட்டாற்றான் வந்து ** இன்று
விண் உலகம் தருவானாய் * விரைகின்றான் விதி வகையே *
எண்ணின ஆறு ஆகா * இக்கருமங்கள் என் நெஞ்சே! 3

என் நெஞ்சத்துள் இருந்து * இங்கு இருந்தமிழ் நூல் இவை மொழிந்து *
வன்னெஞ்சத்து இரணியனை * மார்வு இடந்த வாட்டாற்றான் **
மன் அஞ்சப் பாரதத்துப் * பாண்டவர்க்காய்ப் படை தொட்டான் *
நன்னெஞ்சே! நம்பெருமான் * நமக்கு அருள் தான் செய்வானே 4

வான் ஏற வழி தந்த * வாட்டாற்றான் பணி வகையே *
நான் ஏறப் பெறுகின்றேன் * நரகத்தை நகு நெஞ்சே! **
தேன் ஏறு மலர்த் துளவம் * திகழ் பாதன் * செழும் பறவை
தான் ஏறித் திரிவான * தாள் இணை என் தலை மேலே 5

தலை மேல தாள் இணைகள் * தாமரைக் கண் என் அம்மான் *
நிலை பேரான் என் நெஞ்சத்து * எப்பொழுதும் எம்பெருமான் **
மலை மாடத்து அரவணை மேல் * வாட்டாற்றான் * மத மிக்க
கொலை யானை மருப்பு ஒசித்தான் * குரை கழல்கள் குறுகினமே 6

குரைகழல்கள் குறுகினம் * நம் கோவிந்தன் குடி கொண்டான் *
திரை குழுவு கடல் புடை சூழ் * தென்னாட்டுத் திலதம் அன்ன **
வரை குழுவு மணி மாட * வாட்டாற்றான் மலர் அடி மேல் *
விரை குழுவு நறுந்துளவம் * மெய் நின்று கமழுமே 7

மெய் நின்று கமழ் துளவ * விரை ஏறு திரு முடியன் *
கை நின்ற சக்கரத்தன் * கருதும் இடம் பொருது புனல் **
மை நின்ற வரை போலும் * திரு உருவ வாட்டாற்றாற்கு *
எந்நன்றி செய்தேனா * என் நெஞ்சில் திகழ்வதுவே? 8

திகழ்கின்ற திரு மார்பில் * திரு மங்கை தன்னோடும் *
திகழ்கின்ற திரு மாலார் * சேர்விடம் தண் வாட்டாறு **
புகழ்கின்ற புள் ஊர்தி * போர் அரக்கர் குலம் கெடுத்தான் *
இகழ்வின்றி என் நெஞ்சத்து * எப்பொழுதும் பிரியானே 9

பிரியாது ஆட்செய் என்று * பிறப்பு அறுத்து ஆளறக் கொண்டான் *
அரி ஆகி இரணியனை * ஆகம் கீண்டான் அன்று **
பெரியார்க்கு ஆட்பட்டக்கால் * பெறாத பயன் பெறும் ஆறு *
வரி வாள் வாய் அரவணை மேல் * வாட்டாற்றான் காட்டினனே 10

** காட்டித் தன் கனை கழல்கள் * கடு நரகம் புகல் ஒழித்த *
வாட்டாற்று எம்பெருமானை * வளங்குருகூர்ச் சடகோபன் **
பாட்டாய தமிழ் மாலை * ஆயிரத்துள் இப்பத்தும்
கேட்டு * ஆரார் வானவர்கள் * செவிக்கு இனிய செஞ்சொல்லே 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்